Written by Administrator
Tuesday, 16 April 2013 06:18 - Last Updated Tuesday, 23 April 2013 11:06

□□□□□□□□□□□□□□

Written by Administrator
Tuesday, 16 April 2013 06:18 - Last Updated Tuesday, 23 April 2013 11:06

வரை அனைத்து வகுப்புகளிலும் தமிழ்நாடு வரை படமும், இந்திய வரைபடமும் ஒட்டும் திட்டம் முதலில் திருவாரூர் மாவட்டத்திலும், பின்னர் மற்ற மாவட்டங்களிலும் செயல் படுத்தப்படும்.

•நீலகிரி மற்றும் பிற மலை மாவட்டங் களில் உள்ள பள்ளிக்குழந்தைகளுக்கு பள்ளிச் சீருடையுடன் ஸ்வெட்டரும் இலவசமாக வழங்கப்படும்.

•எய்ட்ஸ் நோயால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படும்.

• ஒரே ஒரு வழக்கில் கைது செய்யப்பட்டவரைக் கூட குண்டர் சட்டத்தில் கைது செய்யும் வகையில் சட்டத்திருத்தம் செய்யப்படும்.

•ஒவ்வொரு மாவட்டத்திலும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கான நிதி ரூ.2 கோடியிலிருந்து 5 கோடியாக உயர்த்தப்படுகிறது.

• மாவட்ட ஆட்சியர்களுக்கான தன் விருப்ப நிதி ரூ.10 லட்சமாக உயர்த்தப்படுகிறது.

•திருவள்ளூர் மாவட்டத்தில் குடிசைப் பகுதிகளில் வசிக்கும் 6730 குடும்பங்களுக்கு அரசு செலவில் வீடுகள் கட்டித்தரப்படும்.

•திருவள்ளூரில் உள்ள அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்தப்படும்.

•திருவள்ளூர் மாவட்டத்தில் தெரிய நெடுஞ் சாலை எண்:5-ல் அவசர சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

•திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவிலில் நடக்கும் கிரிவலம் உள்ளிட்ட அனைத்து திருவிழாக்களுக்குமான செலவை இனி இந்த சமய அறநிலையத்துறையே ஏற்றுக்கொள்ளும்.

•காஞ்சிபுரம் நகரில் உள்ள அனைத்து சாலை களும் பழுது பார்க்கப்படுவதுடன், கோழிமேடு , உத்திரமேரூர் ஆகிய இடங்களில் புதிய மேம்பாலங்கள் கட்டப்படும்.

•முக்கியத் தலைவர்களின் சிலைகளை கற்றி கம்பி வேலி அமைக்கப்பட்டு, அதன் சாவி மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படும்.

•காவல்துறை தலைமை இயக்குனரிடம் உள்ள



சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியாகள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டின் நிறைவு நாளன்று, முதலமைச்சரின் தனிப்பிரிவில் பெறப்பட்ட மனுக்கள் மீது விரைவான நடவடிக்கை எடுத்ததற்காக இருசிறி மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரனுக்கு முதலமைச்சர் ஜெயலலிதா பரிசு வழங்கினார்.

நிர்வாக அதிகாரங்கள் கூடுதல் தலைமை இயக்குனர் மற்றும் காவல்துறைதலைவர்(ஐ.ஜி) அதிகாரத்தும் பிரித்து அளிக்கப்படும்.

•தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத் திற்கு கூடுதலாக ஒரு டி.ஐ.ஜி. மூன்று கண்கா ணிப்பாளர்கள், இரண்டு துணை கண்காணிப் பாளர்கள், நான்கு ஆய்வாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

• ரூ 25 லட்சம் செலவில் தமிழகத்தில் உள்ள புழல், வேலூர், கடலூர், சேலம் ஆகிய மத்திய சிறைகளில் வீடியோ கருவிகள் அமைக்கப்படும்.

•தமிழகத்தில் புதிய தாலுக்காக்களை கருவாக்குவது குறித்து பரிந்துரைக்க புதிய குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் புதிய தாலுக்காக்கள் உருவாக்கப்படும்.

•பட்டாக தொழிற்சாலைகளில் தீ விபத்து ஏற்பட்டால் தீயை விரைவாக அனைக்க வசதியாக மேற்கூரைகளில் தெளிப்பான்கள் அமைக்கப்படுவது கட்டாயமாக்கப்படும் என்பன உள்ளிட்ட 343 அறிவிப்புகளை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டார். ●